இஃது தேவார நகரம் சுத்தாத்வைதி

## அருட்கவி ஸ்ரீ விலக்ஷணானந்த பரமாத்மாஜி

திருவாய் மலர்ந்தருளிய

# ஆன்ம ஒளியின் ஆணி வேர்கள்



## 120ஆம் ஆண்டு ஜெயந்தி விழா

4-1-2015, ஞாயிற்றுக்கிழமை

*தொகுத்தளிப்பவர்*

**டாக்டர் திருமதி மூ. அனந்தகிருஷ்ணா**

ஓம் தத் ஸத்

இஃது தேவார நகரம் சுத்தாத்வைதி
அருட்கவி ஸ்ரீ விலக்ஷணானந்த பரமாத்மாஜி
திருவாய் மலர்ந்தருளிய

# ஆன்ம ஒளியின் ஆணி வேர்கள்

சூல்வாயில் படராது சூக்ஷுமமாம் பரத்திடையே
ஆல்வாயில் நால்வருக்கு அருள் செய்த எம்பெருமான்
மால்வாயில் வேங்கடமாமலை யிருந்த மாலினருள்
மேல்மாயில் நகரிடையே மேவும் ஸ்ரீ விலக்ஷணமே.

ஸ்ரீ விலக்ஷணானந்தரின் 120ஆம் ஆண்டு ஜெயந்தி
விழாவையொட்டி பிரசுரிக்கப்பட்டது
**4-1-2015, ஞாயிற்றுக்கிழமை**

தொகுத்தளிப்பவர்
**டாக்டர் திருமதி அனந்தகிருஷ்ணா**
16/12, டானியல் தெரு, ஆதம்பாக்கம், சென்னை - 600 088.
☎ : 2245 0119 அலைபேசி : 92821 04459

முதற் பதிப்பு : ஜனவரி 2015



ஸ்ரீ விலக்ஷணானந்த ஸ்வாமிகளின்
ஆன்மீக அன்பர்களுக்கு சமர்ப்பணம்

ஒளியச்சு & அச்சிட்டோர்
**பரணி கிராஃபிக்ஸ்**
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
தொலைபேசி : 2813 1102



# இதோபதேசம்

## கருமம்

1. அதிகாலையில் படுக்கையை விட்டெழுந்திருந்து மனதைத் தூக்க மயக்கத்திலிருந்து தெளியப் பண்ண வேண்டும்.

2. ஐந்து மணி முடிவதற்குள் பல் துலக்கி அவரவர்கள் வருணாசிரம தருமப்படி நெற்றியில் குறியிட வேண்டும்.

3. எந்தக் காரியங்களைச் செய்ய ஆரம்பிக்கும்போதும், முடியும் போதும், முடிந்த பின்பும் சமரசமான மனதுடன் ஈஸ்வரனைப் பிரார்த்திக்க வேண்டும்.

4. கர்ம விதிப்படி நடக்கிறவர்களைக் கண்டு ஆராதிக்க வேண்டும்.

5. தன்னாலியன்றவரை அடியார்களுக்கு அன்னம் அளித்து உபசரிக்க வேண்டும்.

6. இல்லறத்தார்கள் பாத்திர மறிந்துதான் தருமஞ் செய்ய வேண்டும்.

7. சோம்பேறிகளுக்கு ஓர் அற்ப உதவியும் செய்யக் கூடாது.

8. கருமத்திலும், கரும சாஸ்திரங்களிடமும், கரும காண்டிகளிடத்திலும் விசுவாசமாயிருக்க வேண்டும்.

9. யாரார் எப்படிச் சொன்னாலும் தன்னுடைய கர்மானுஷ்டானத்தை விடக் கூடாது.

10. எவனெவன் எந்தெந்த ஜாதியோ, எந்தெந்த ஆஸ்ரமமோ, எந்தெந்தத் தேசமோ, எந்ததெந்த ஊரோ, அந்தந்த ஆசாரப்படி நடந்துக் கொள்ள வேண்டும்.

11. தினந்தோறும்தேவாலயங்களுக்குச் சென்று விதிப்படி நமஸ்கரித்துத் துளசி, விபூதி முதலிய பிரசாதங்களைப் பெற்றக் கொள்ள வேண்டும்.

12. புலாலுண்ணாமல் அதைப்பற்றிக் கூறுகிற பிரபல சாஸ்திரங்களைத் தாத்பரியங்களுடன் நன்றாய்க் கற்று அதன்படி நடக்க வேண்டும்.

13. மஹான்களிடம் அடிக்கடிச் சென்று கர்ம காண்ட விதிப்படி நடக்க வேண்டியவைகளைக் கேட்டு அதன்படி நடக்க வேண்டும்.

14. அடிக்கடி தீர்த்த யாத்திரை, ஸ்தல யாத்திரை, தேவ யாத்திரை இவைகளுக்குப் போய்வர வேண்டும்.

15. பசி என்று காதில் பட்டால் அதற்கு வேண்டிய முயற்சி அப்போதே செய்ய வேண்டும்.

16. பூர்வ மீமாம்சா கருமகாண்ட சாஸ்திரங்களை நன்றாய்ப் பரிசிலனம் பண்ண வேண்டும்.

17. யதார்த்த வாக்குகளை யதார்த்தமாகப் பேச வேண்டும்.

18. ஏகாதசி, அமாவாசை, நவராத்திரி, சஷ்டி, அஷ்டமி முதலிய அரிய விரதங்களை நியமப்படி அனுஷ்டிக்க வேண்டும்.

19. சாஸ்திரங்களிடத்தில் அளவு கடந்த அன்பு வைக்க வேண்டும்.

20. எல்லா ஸ்திரிகளையும் சகோதரிகளாகவும், மாதாவாகவும் நினைத்து அதன்படி நடக்க வேண்டும்.

21. எவ்விதமான காரணத்தினாலும் லாகிரி பதார்த்தங்களை உபயோகிக்கக் கூடாது.

22. லாகிரி பதார்த்தங்களை உபயோகிக்குமிடங்களிலும் உபயோகிக்கப்பட்டவர்களிடத்திலும் சென்று வரக் கூடாது.

23. தினந்தோறும் புஷ்பம் பறித்துப் பகவானுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

24. பகவானுடைய திருநாமங்களை அடிக்கடி ஜபஞ் செய்ய வேண்டும்.

25. கரும காண்ட விதிப்படி தீக்ஷைகள் செய்துக் கொண்டு அதன்படி நடக்க வேண்டும்.

26. நம்மால் யாருக்கும் ஓர்விதத் தீங்குமில்லாத மாதிரி நடந்துக் கொள்ள வேண்டும்.

27. ஒரு ஜீவனுக்கும் ஒரு இம்சையாவது செய்தல் கூடாது.



28. ஸ்தூல சரீரத்தை அடிக்கடிச் சுத்தஞ் செய்ய வேண்டும்.

29. ஸ்தூல சரீரத்தை நம்முடைய ஸ்வாதீனப்படுத்திக் கொள்ள வேண்டும்.

30. காலால் நடந்து கொண்டே பகவத் ஜபஞ் செய்து, அதே மாதிரி பல தடவைகளும் நடக்க வேண்டும்.

31. தினந்தோறும் பகவத் சன்னிதானத்தில் நின்றுக் கொண்டு பலவித துதிகளான தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி முதலியவைகளிலுள்ளவைகளை பாராயணஞ் செய்ய வேண்டும்.

32. அப்படியே அதன்படி நடக்க வேண்டிய விஷயங்களை நடப்பவர்களிடம் கேட்க வேண்டும்.

33. நந்தவனம் வைத்து அதைப் பாதுகாத்து அதிலுண்டாகும் புஷ்பங்களைப் பகவானுக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

34. கர்மானுஷ்டான தூஷணஞ் செய்பவர்களிடம் சொல்லக் கூடாது.

35. யாதாமோர் காரணத்தாலும் கர்மானுஷ்டான காலத்தினின்று நழுவுதல் கூடாது.

36. விதிப்படி கர்மங்களை வழுவறச் செய்து அதன் பிரயோஜனத்தைச் சகுண ஈஸ்வரனுக்கு அர்ப்பணஞ் செய்ய வேண்டும்.

37. எந்தக் கருமஞ் செய்த போதிலும் அதில் பற்றற்றுச் செய்ய வேண்டும். செய்யும்போது அந்தக் கரும ஞாபகமாகவே இருக்க வேண்டும்.

38. முதலாவது கருமகாண்ட மாரம்பிக்கும்போது ஸ்தூல சரீர தத்துவமின்னது, அது இத்தனை, ஆதாரமிது, ஆதாரமெத்தனை யென்பதை விவரமாக அறிய இச்சை கொள்ள வேண்டும்.

39. கருமாநுஷ்டானத்தின் முடிவு இன்னதென்பதை அவசியம் தெரிந்து கொள்ள வேண்டும்.

40. கரும காண்டம் அனுஷ்டிக்கும்படி செய்பவர்களுக்கு கரும உதவி அவசியம் செய்ய வேண்டும்.

## பக்தி

41. கருமகாண்டத்தின் பிரயோஜனத்தைத் தெரிந்து கொண்ட பின் பக்தியை ஆரம்பிக்க வேண்டும்.

42. எப்போதும் பகவானைப் புருஷனாகவாவது, சிநேகிதனாக வாவது தாயாராகவாவது, பிதாவாகவாவது, புத்திரனாக வாவது, யஜமானனாகவாவது நினைத்து பக்தி பண்ண வேண்டும்.

43. மனதை எப்போதும் சகுண நிற்குண பகவான் பாதார விந்தங்களிலே செலுத்திக் கொண்டிருக்க வேண்டும்.

44. உலக விஷய போக சுகங்களில் இச்சையை விட்டுத் தனிமை யாய்ச் சஞ்சரித்து மனதை ஏகாக்ரகப்படுத்த வேண்டும்.

45. தசேந்திரியங்களையுந் திருப்பித் தன்னிடத்தில் சேர்க்க வேண்டும்.

46. பகவானைச் சேர வேண்டுமென்று அழுது புரண்டு கதற வேண்டும்.

47. எப்போதும் பகவான் நாமத்தையே மனதிலும் வாயிலும் உச்சரிக்க வேண்டும்.

48. தானென்னும் பாவனை இல்லாமல் எப்போதும் அவனே இருக்கும்படி பக்தி பண்ண வேண்டும்.

49. யதார்த்த பக்தர்களோடு கூடி ஆடிக் களிக்க வேண்டும்.

50. தன் சுதந்தரத்தை எல்லாம் பகவானுக்குக் கொடுத்துவிட்டுத் தான் பரதந்திரனாக இருக்க வேண்டும்.

51. பரதந்திர சுவாதீனம் வரவில்லையே என்று கண்ணீர் விட்டழுது பகவானைப் பிரார்த்திக்க வேண்டும்.

52. எப்போதும் சிறுபாலர்களோடு கூடியாடித் தானும் பாலர் களைப் போல் விளையாடி வர வேண்டும்.

53. பண்ணுங் கிரியைகளெல்லாம் பகவானென்றே எண்ணிச் செய்ய வேண்டும்.



54. எல்லோரும் பக்தியை அடைய வேண்டுமென்று பகவானைப் பிரார்த்திக்க வேண்டும்.

55. சதாகாலமும் இராஜச தாமச குணங்களைத் தள்ளச் சாத்வீக பக்தி பண்ண வேண்டும்.

56. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமாகப் பகவானைப் பக்தி பண்ணி வரவேண்டும்.

57. ஏகாந்தத்திலிருந்து பகவானிடம் பேசுவது போலவே தனக்குத் தோற்றியவாறு புலம்பல் போல் பேச வேண்டும்.

58. பகவானை நினைத்துப் பரவசங் கொண்டு ஆடிக் களிக்க செய்ய வேண்டும்.

59. மனதென்னும் புஷ்பக் கொட்டிலில் அன்பென்னும் புஷ்பம் பறித்துப் பகவான் பாதங்களில் நிறைக்க வேண்டும்.

60. நான் என்பது எழுந்த உடன் பகவானை நினைத்து ஓலமிட வேண்டும்.

61. எப்போதும் தன்னை நம்பாமல் தன்னான்மாவைத் தனித்து நம்ப வேண்டும்.

62. எல்லாப் பொருளும் நீயே என்று ஒவ்வொரு நாளும் நினைத்து வரவேண்டும்.

63. பகவான் ஒருவனென்னும் அபேத புத்தியல்லாது பலவென்னும் பேத புத்திக் கூடாது.

64. சர்வ விவகாரத்தினின்றும் நழுவி விடவேண்டும்.

65. எங்கும் பகவனாகும்படிப் பண்ணிக் கொண்டதும் மறந்து போக வேண்டும்.

## ஞானம்

66. எப்போதும் நாம் நம்மை மறக்கக் கூடாது.

67. மனுஷ்ய சங்கமின்றிய ஏகாந்த ஸ்தலத்தையே எப்போதும் நாடி ஆத்ம விசாரஞ் செய்ய வேண்டும்.

68. சதா உபசாந்த உண்மையைப் பழகி வரவேண்டும்.

69. சூக்ஷூம தேக விசாரணை செய்து அதைத் தள்ளி காரண தேக விசாரணைச் செய்ய வேண்டும்.

70. ஜீவத் தன்மையை விசாரித்து ஜீவன் முக்தியை பழக வேண்டும்.

71. சர்வ விவகாரங்களும் தானென்றிருக்க வேண்டும்.

72. எவ்வித உலகமும், கிரியைகளும் தானல்லவென்றெண்ண வேண்டும்.

73. வேதாந்த தர்க்க சாஸ்திரப் பயிற்சி கூடாது.

74. அனுபவ கிரந்தங்களை ஏகாந்தமாக அப்யசிக்க வேண்டும்.

75. மிகுதியான வார்த்தையாடுதல் கூடாது.

76. மிகுந்த ஆகாரமுட் கொள்ளக் கூடாது.

77. அற்ப ஆகாரமுட் கொள்ள வேண்டும்; அதுவும் சாத்விகமாக இருத்தல் வேண்டும்.

78. மனதிற்கு நித்திரை வராதபடி அதிஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

79. நித்திரை வந்தாலும் உணர்வோடு தூங்க வேண்டும்.

80. எப்போதும் ஸ்திரீகள் சங்கமின்றியிருந்துக் கொள்ள வேண்டும்.

81. உலக விவகாரமுடையவர்கள் பழக்கங் கூடாது.

82. இந்திரியங்களை மனதிலடக்கி, மனத்தை ஆத்மாவிலடக்கி வரவேண்டும்.

83. இராஜ யோக அனுசார லக்ஷணப்படி அனுஷ்டித்து வர வேண்டும்.

84. ஆத்மாவில் மனதை நிறுத்தி அதில் நின்று இறங்காமலிருக்க வேண்டும்.

85. சர்வ சாதன சாத்தியமான பின்பு ஞானத்திற்காரம்பிக்க வேண்டும்.



86. உலகமென்று வந்தாலுடனே மாற்ற வேண்டும்.

87. சர்வ சமய சமரச சாந்த நிலையை அடைய வேண்டும்.

88. சிவ விஷ்ணுக்களிடம் பேதபுத்தியின்றி இருக்க வேண்டும்.

89. வேதத்தின் தத்துவம் மாறாது.

90. சத்தியமான வஸ்துவை பழகி அசத்தியத்தை அகற்ற வேண்டும்.

91. சவிகற்ப சமாதி அப்பியாச முடிவை அறிந்துக் கொள்ள வேண்டும்.

92. நனவிற் சுழுத்தி நிலையை அடிக்கடி பழகிச் சகசமாக்க வேண்டும்.

93. ஜீவன் முக்தியை அடைய வேண்டி நிருவிகற்ப சமாதியைப் பழக வேண்டும்.

94. பந்தமுக்தியின் சாஸ்வத லக்ஷணங்களைத் தெரிந்துக் கொள்ள வேண்டும்.

95. கூடஸ்த தரிசன உபாயங்கண்டதன் பின்பு ஆத்மானுபவத்தை பழக வேண்டும்.

96. சரீர நாடி சுத்தியுடன் மனோசுத்தி செய்து பின்பு ஆத்மசுத்தி செய்ய வேண்டும்.

97. ஒவ்வொரு மதங்களின் முடிவுகளைத் தெளிவாக தெரிந்துக் கொள்ள வேண்டும்.

98. என்ன விவகாரம் புரிந்துக் கொண்டிருந்தாலும் மனது அந்தர்முகமாகவே இருக்க வேண்டும்.

99. உலக அதீத ஆத்ம சுகத்திலே ஆழ்ந்தி ஆழ்ந்தி மிதக்க வேண்டும்.

100. அகண்டானந்த சத்தபுத்த சைதன்ய சாந்தானந்த சாக்ஷத்கார சொருபத்தைச் சதாநினைத்து நாமந்த நிலையை அடைய வேண்டும்.

ஓம் தத் சத்

# ஸ்ரீ விலக்ஷணானந்தர் உத்வேகம்

அண்டமது கிடுகிடுத்து விழுந்தாலென்ன
அமரர்களு முனிவர்களு மழிந்தாலென்ன
விண்டுவுடன் மூவருமே வீய்ந்தாலென்ன
வேதமுதற் கலைகளெலா மொழிந்தாலென்ன
கொண்டலிடிந் திப்புவியில் வீழ்ந்தாலென்ன
கூடாத தென்னென்ன செய்திட்டாலும்
பண்டிருந்த என்மனது பயந்திடாது
பாராதி நிறைந்திருந்த பரமதேவே.

1. தெய்வீகத் தன்மை வாய்ந்திருக்கப்பட்ட நமது தாய் நாடாகிய பாரத கண்டத்தின் எதார்த்தமான சுத்த சத்துவ சநாதன அனாதிவைதீக ஹிந்துமதத்தின் அந்தரங்க பகிரங்க ஸ்தூல சூக்ஷமரக ஸ்யார்த்தங்களையும் அதன் தத்துவங் களையும் பதினான்கு உலகங்களிலுமுள்ள ஆத்ம சகோதர சகோதரிகளுடைய ஹிருதய கமலங்களில் பதியச் செய்து விடுவோமாக.

2. நமது உத்தமமான எதார்த்த ஆத்மஞான நிலமையை அந்தரங்க திட அபரோக்ஷமாய் அனுபவத்திலறிந்து கொண்டு அந்த அனுபவத்தை வஞ்சகமின்றி சகல ஜனங் களுக்கும் போதிப்பதற்காக எல்லாவற்றையும் உதறித் தள்ளிவிட்டு அதிதீர ஞான உதார கெம்பீரத்துடன் புறப்பட்டு விடுவோமாக.

3. பிரபஞ்சத்திலுள்ள சகல ஜீவராசிகளுடனும் பிரஹ்ம ஞானத்திற்கு சாதகமான அந்தரங்க ஞான சமரசம் பாராட்டுவோமாக.



4. ஜன்ம மரணத்தை எறிந்துவிடக் கூடிய ஆத்ம ஞான சாதன மான சன்மார்க்க விஷயங்களில் எப்போதும் உத்வேகம் குறையாமல் முயற்சி செய்து வருவோமாக.

5. அறுசுவை உணவாதிகளை அளவுக்கு மீறி யாதொரு தடையுமின்றி உண்டு களிப்பதனாலும், ஆடையாபரணங் களை அபரிமிதமாக அணிந்துக் கொள்ளுவதனாலும், உயர்ந்த உன்னத மாளிகையில், அழகிய உப்பரிக்கைகளில் உலக சுகங்களை உடனுக்குடன் அனுபவித்து வருவதனா லும், அழகிய மாதர்கள் முதலிய சிறிய போகங்களில் ஆழ்ந்திருப்பதனாலும் கெம்பீரமான சகடங்களிலும் வாகனங்களிலும் ஏறிச் செல்லுவதாலும், பரம திருப்தி அடைந்து கொண்டு தன்னையும் தனக்கு அப்பாற்பட்ட கடவுளையும் மறந்திருக்கின்ற ஜனங்களைப் பூலோகப் புழுக்களென்று திரிமூர்த்திகளும் மற்றுமுள்ள தேவர்களும், ரிஷிகளும் ஏளனம் செய்வார்களாகையால் அவ்வித மயக்க ஜனங்களுக்குப் பரிசுத்தமான உண்மையுள்ள சுதந்திரப் பிரஹ்ம ஞானத்தைப் போதித்து வருவோமாக.

6. சாந்தமும் அன்பும் அறிவும் அடக்கமும் மாறாது குடி கொண்ட ஹிருதயத்தைச் சம்பாதித்துக் கொண்டு சதோதய மான கடவுளைத் தவிர வேறு ஒருவரையும் கொஞ்சமேனும் ல யம் செய்யாமல் உலகத்தில் உலாவி வருவோமாக.

7. அண்டங்களெல்லாம் கிடுகிடுவென்று நடுங்கினாலும் பனிரெண்டு சூரியர்கள் ஏக காலத்தில் எரித்தாலும் மஹம்மேரு பர்வதம் சினந்து சிரசில் விழுந்தாலும் யுகாந்த கால பிரசண்ட மாருதம் கோபித்து அடித்தாலும் சப்த சாகரங்கள் கொதித்து எழும்பினாலும் கொஞ்சமேனும் அசையாத நெஞ்சத்தோடு பிரபஞ்சத்தில் சஞ்சரித்து வருவோமாக.

8. எவ்விஷயத்திலும் யாரிடத்திலும் அடிமையாயிருக்குங் குணத்தை அற ஒழித்து விடுவோமாக.

9. சகல கர்மங்களையும நாம் செய்யவில்லையென்றும் நாம் செய்யாமல் நம்மாற் செய்யப்பட்ட கர்ம பலன்கள் நமக் கில்லையென்றும் நிச்சயித்து ஈஸ்வர அபேத சுதந்தர பரதந்திர பக்தி யோகத்தை பழகி வருவோமாக.

10. உலக மயக்க சம்பந்தமான வெளித் தோற்ற சமரஸ ஜாலங் களை முன்பின் யோசிக்காமல் அறவே விட்டு விடுவோமாக.

11. ஈஸ்வரப் பிரதிநிதிகளான மஹரிஷிகளின் ஆதிகால அதி அத்புத பிரஹ்ம ஞான சாதனமான வருணாஸ்ரம தர்மங் களை வேதவிதிப்படி முறையே அனுஷ்டித்து வருவோமாக.

12. வேதத்திற்கும் அதன் அந்தர்பூத வேதாந்தத்திற்கும் அதன் உச்சியில் விளங்கானின்ற தேவாதி தேவனுக்கும் இவற்றை யெல்லாம் அனுபவத்தில் கண்டறிந்த மஹரிஷிகளுக்கும் அங்கிகாரமில்லாத வெளி வேஷமான போலி மதங்களை யும், ஆசாரியர்களையும், வேதங்களையும், தோற்றங்களை யும், போலிச் சமரசங்களையும், ஒரு சூரியன் மறைந்து, மற்றொரு சூரியன் வருவதற்குள் தேசப் பிரஷ்டம் செய்து விடுவோமாக.

13. நித்தியா நித்திய வஸ்து விவேக ரகஸ்ய தத்துவத்தில் உறுதியாய் நிலைத்துச் சகல அனித்ய இச்சைகளையும் திரும்பிப் பாராமல் விட்டுவிடுவோமாக.

14. பற்றற்ற பரமசாந்த சுகாதித நிலமையை யாதொரு பற்று மின்றிப் பற்றி வருவோமாக.

15. ப்ரஹ்ம ஞான அனுபவ உணர்ச்சி மாறாமலிருந்துக் கொண்டு எல்லாவித கர்மங்களையும் சரிவரச் செய்து வருவோமாக.

16. எல்லோருடைய தயவையும் எதிர்பார்த்துக் கொண்டு உலகத்தில் சஞ்சரிக்கக் கூடிய அவ்வளவு பரிதாப நிலைமையோடு வாழ்வதைக் காட்டிலும் மஹா பயங்கர



மான நிர்மானுஷ்ய வனாந்திரத்தில் கொடூர மிருகங்கள் எதேச்சையாக வாழப்படுகிற ஸ்தானங்களில் தனித்து உலாவுவதே சிலாக்கியமானதென்பதை நமது எல்லாச் சகோதர சகோதரிகளுக்கும் கண்டிப்பாய்த் தெரியப்படுத்தி விடுவோமாக.

17. அந்தர்முகமும் பகிர்முகமும் இல்லாத மஹாத்மாக்களிடம் அடிக்கடி சென்று ஆத்மானுபவத்தில் ஏறி அசையாது நின்றுக் கொண்டு அங்கிருந்து பிரபஞ்சத்தில் குதிப்போமாக.

18. திரும்பிப் பாராமல் பிரபஞ்சத் தத்துவங்களை யெல்லாம் ஒவ்வொன்றாகத் தாண்டிச் சென்று ஒன்றிலுந் தாக்கற்ற அதீத நிலைமையில் காலை தூக்கி வைத்த பின் உலகத்தை மெள்ளத் திரும்பிப் பார்ப்போமாக.

19. உண்மையான பரிதாப ஜனங்களுக்கு உத்தமமான உதவியை உடனே செய்வோமாக.

20. அன்னமின்றி பரிதவிக்கும் ஜனங்களுக்கு பிரதிப் பிரயோஜனத்தை எதிர்பாராமல், அன்போடு அன்னமிடவும், சுறுசுறுப்பின்றிச் சோம்பேரியாயலையும் தமோ குண முடையவர்களுக்கு சுறுசுறுப்பின் சுத்த சத்துவ குணத்தைப் போதிக்கவும், அநித்ய உலக தக்ஷிணைகளுக்காக ஊரூராக அலைகின்ற பாமரர்களுக்கு நித்திய ஞான தக்ஷிணையைக் கொடுக்கவும் அந்தந்த அதிகார புருஷர்களை ஏகாக்ர மனத்தோடு வேண்டிக் கொள்வோமாக.

21. இறப்பு பிறப்புகளின் இன்பத் துன்பங்கள் சிறிதளவுமில்லாத ஏகாந்த நகரத்தில் அந்தரங்க மாளிகையில் அதீத உபரிக்கையின் மீது அதி சூக்ஷ்ம ஞான மனைவியோடு அகண்டானந்தத்தில் நிலைத்து நிற்போமாக.

22. வெளி விஷயப் பாசாங்கு, நிஷ்டை, ஞானம், இராஜரீகம், யோகம், சந்நியாஸம், விவகாரம், அநுஷ்டானம், யுக்தி, வேதம், குரு உபதேசம் இவைகளை மூலத்துடன் வெட்டி விடுவோமாக.

23. உலகத்திலுள்ள உயர்ந்த உன்னத ஸ்தானத்தில் உத்த மோத்தம சுத்த சத்துவ குணப் பிரதான அதிகார அந்தர்முக ஆனந்த அவதார புருஷன் உலாவி வருகிறானாம். உலக உத்தாரணத்தின் பொருட்டுக் கீழிறங்கி வரப் போகிறானாம். அன்னவரது அழகிய அதி அற்புத வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருப்போமாக.

24. அண்டங்களிலுள்ள அத்தனை ஜீவராசிகளையும் அந்தரங்கத்தில் நாமாகவும், பஹிரங்கத்தில் அன்னியமாக வும் நினைத்து உலக ஜனங்களோடு பழகி வருவோமாக.

25. உண்மையான ஈஸ்வரனுக்கும், வேதத்திற்கும், பொருத்த மானதும், சொந்த யுக்தி, சொந்த அனுபவம், இவற்றிற்குச் சம்மதமானதும் ஜனகாதி மஹத்துக்களுக்கும் சுகாதி ப்ரஹ்ம ரிஷிகளுக்கும், வசிஷ்டாதி மஹரிஷிகளுக்கும், ஜடகோபாதி மஹான்களுக்கும், புத்தாதி ஞானிகளுக்கும், அங்கீகாரமானதும் அனாதியாயுள்ளதுமான மதத்தையும் ஞானத்தையும் அங்கீகரிப்போமாக.

26. உதிரத்தையும் அதன் சக்தியையும், அதன் சூக்ஷ்மத்தையும், உண்மையான காரியங்களாயிருந்தால் விட்டுக் கொடுப்போமாக.

27. ப்ரஹ்ம ஞான உபரிக்கைமீது ஏறி நிலைத்து நின்று கொண்டு ப்ரபஞ்ச மயக்க ஜால விநோதங்களை இளஞ்சிரிப்போடு சாந்தப் பார்வையாய் பார்வையிடுவோமாக.

28. பிரபஞ்சமும் அதன் சாதன வர்க்கங்களும், செய்கைகளும் சகல நினைப்புகளும் பரமாத்மாவென்று உறுதியாய் பாவனை செய்து வருவோமாக.

29. மணவாளனே தெய்வமென்ற கர்மயோக தத்துவத்தையும், பர்த்தாவே தானென்கிற ஞானயோக ரகஸ்யத்தையும், நாயகனே இல்லை என்கிற பக்தியோக முடிவையும், இவ்வுலகத்து உத்தமிகளுக்கும், தேவலோக பிதுர்லோக வைகுண்ட கைலாஸ சத்திய லோக வாசிகளான மாதரஸி களுக்கும், நவக்கிரக லோக யக்ஷகின்னர, கிம்புருட, காந்தர்வ, வித்தியாதர லோக ஸ்திரி ரத்தினங்களுக்கும் போதித்து வருவோமாக.



30. யானையின் காலடியில் மற்ற மிருகங்களின் பாதச் சுவடுகள் அடங்கியிருப்பதுபோல உத்தமமான உபசாந்தக் கடவுள் மதப்பிரசாரத்தில் பிரபஞ்சத்திலுள்ள மற்ற மதப் பிரசாரங் களும் தத்துவங்களும் இராஜீய முதலிய சகல பிரசாரங் களும் அடங்கியிருக்கின்றனவென்று தெரிந்து கொண்டு கடவுள் மதப் பிரசாரம் செய்து வருவோமாக.

31. எந்த விஷயங்களிலும் எப்போதும் பகிர்முக நாட்டமின்றி அந்தர்முக நாட்டமாகவே திருஷ்டியைச் செலுத்தி வருவோமாக.

32. எல்லா உலக ஸ்திரி புருஷர்களும் தங்கள் தங்கள் அனித்திய சரீரங்களைத் தானென்றெண்ணியிருக்கிற அகங்கார சங்கற்பத்தை விட்டொழிந்து அதித ஆத்மாவே தானென்று ஞானவுணர்ச்சியோடு உண்மையுலகத்தில் உலாவி வருவோமாக.

33. மனத்தையும் இந்திரியங்களையும் கண்டிக்கக்கூடிய ஆத்ம கைங்கர்யம் பூர்த்தியானபின் ப்ரஹ்ம ஞானத்தையடைய முயற்சி செய்வோமாக.

34. சூக்ஷ்ம அறிவும், களங்கமற்ற மனதும், திட ஞானமும், அந்தர்முக ப்ரஹ்ம விசாரணைக்கு முக்கிய சாதனமென்று சந்தேகமில்லாமல் தெரிந்து கொள்வோமாக.

35. ஸ்திரி இரத்தினங்களை தங்கள் தங்கள் பதியை யன்றி வேறு புருஷர்களைக் கனவிலுங்கூட கருதக் கூடாதென்று வற்புறுத்துவது போலப் புருஷ இரத்தினங்களையும், தங்கள் தங்கள் பத்தினிகளையன்றி வேறு ஸ்திரிகளைச் சொப்பனத்திலும் எண்ணக் கூடாதென்று கண்டிப்பான உத்திரவு இடுவோமாக.

50. முத்தேவர்கள் முதல் எத்தேவர்களானாலும் முழு முதற் கடவுளல்லவென்ற மூல வேதத்தின் முடிவை உணர்ந்து மோனமைந்துங்கடந்த முத்திநிலைமையை அடையத்தீவிர அவாக் கொள்வீராக.

51. உலகப் பொருள்கள் ஞானப் பொருளை அடைவதற்குப் பரம்பரா சாதன மாகையால் எந்தவிதத்தினாலாவது யாருக்கும் யாதொரு தீங்குமின்றி உலகப் பொருள்களைத் தீவிரமாகத் தேட முயற்சி செய்வீர்களாக.

52. த ணாமூர்த்தி முதல் எல்லா குரு மார்களாலும் வேத முதல் எல்லாச் சாஸ்திரங்களாலும் சொல்லப்படுகிற அனுபவத்தை விரும்பாமல், சொல்லாத அனுபவ உண்மையை அறிய அதிக ஆவல் கொள்வீராக.

53. கெம்பீரமான கேசரி நாட்டத்துடன் ககன யோக சாம்ப்ராஜ்ய சுதந்திர ஸ்வாதீன புருஷ தேஜோஜ்வலனாகி துரிய பூமியிற் சஞ்சரித்து மற்றொன்றையுங் கருதாதிருப்போமாக.

54. அகிலலோக சாம்ப்ராஜ்யங்களையும், சகல மோக்ஷ சாம்ப்ராஜ்யங்களையும், அகண்ட அறிவாலகற்றிவிட்டு, அதீத சாம்ப்ராஜ்யத்தின் உதவியால் அத்வைத சாம்ப்ராஜ்ய நிலைமையை அடைந்து அதையுமகற்றி அப்பாலுள்ள நிருவாண மௌன சகஜ சாம்ப்ராஜ்ய ஜோதிமயமாய்ப் பிரகாசிப்போமாக.

—: ஓத் தத் ஸத் :—



# சநாதன தருமம்

எதார்த்தமான சநாதனத்தை உள்ளபடி அறியவேண்டிய தீவிர ஆசை கொண்ட முமுக்ஷுக்களே,
ஆத்ம சகோதர்களே சகோதரிகளே பக்த ஜனங்களே,

இன்று நான் பேச வேண்டிய விஷயம் சநாதன தருமம், பரமாத்ம பக்தி என்ற இரண்டு அருமையான விஷயத்தைப் பற்றிய தென்பது நீங்கள் உபந்நியாசப் பத்திரிக்கை மூலமாக அறிந் திருக்கிறீர்கள். பரமாத்மப் பிரதிநிதிகளாகிய நீங்களெல்லோரும் தயவு செய்து உங்களது நானாவித சங்கல்ப ஜாலங்களை ஒன்று படுத்தி ஏகாக்கிர சித்தத்துடன் கேட்பீர்களென்று நம்புகிறேன்.

**சநாதன மென்பது :**

எப்போதுமுள்ளது அழிவில்லாதது என்பது அர்த்தம். அப்படி உள்ளது பிரஹ்மம் ஒன்றுதான். அதை அடைய வேண்டிய மார்க்கங்களில் விக்கிரஹ ஆராதனை முதல் விதேக முக்தி வரை சநாதன தர்மமென்றே அறிந்து கொள்ளுங்கள். பரமாத்மாவை யடைய வேண்டுமென்ற மோக்ஷ இச்சை இல்லாமல் செய்யப்படு கின்ற எவ்வகைப் புண்ணியக் காரியங்களும் சநாதன தர்மத்தில் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டாது. அழிவு பெறக் கூடிய எவ்விதப் பதவிகளை உத்தேசித்தும் செய்யப்படுகிற பிரபலமான சத் காரியங்களை மஹாத்மாக்கள் கரும யோகத்திலேயே சேர்த்துக் கொள்ளவில்லை. வாஸ்தவமாக சநாதன தர்மத்தை யடைய வேண்டுமானால் நிச்சயமாக அநித்தியத்தில் ஆசையை ஒழித்து விடவேண்டும். தினந்தோறும் ஏகாந்தமான ஓரிடத்திலிருந்து கொண்டு மனதைப் பத்து இந்திரியங்களின் வழிகளில் விடாமல் தடுத்து வேறு எவ்வித சங்கற்பமு மில்லாமற் செய்துக் கொண்டு

நாம் யார்? நமக்கும் பரமாத்மாவுக்கும் என்ன சம்பந்தம்? நாம் பரமாத்மாவை யடைய முடியுமா? பிரபஞ்ச சிருஷ்டியின் மூல காரணமென்ன? மனதின் சொருபத்தையறிவதெப்படி? நமக்கு ஜென்ம மரணமுண்டா? அதைப் போக்கத்தக்க உபாயம் யாது? என்ற பிரஹ்ம ஞான விசாரணையுடன் சரீர முதல் பிரகிருதி வரையுள்ள ஒவ்வொரு தத்துவங்களையும் தனித்தனி பரிசீலனை செய்து தீர ஆலோசித்துச் சில நிமிஷங்களாவது மனதை அதில் நிலை நிறுத்தி வந்தால் உண்மையான சநாதனத்தை யறியலாம்.

வைகுண்டத்தில் ரக்ஷகத் தொழிலோடு சமஸ்த வைபவங் களுடன் ஸ்ரீ மஹாலக்ஷ்மிதேவி சமேதரராய் எழுந்தருளியிருக்கின்ற எம்பெருமான் க்ஷீராப்தியிலும், கைலாஸ பருவதத்தில் வெகு கெம்பீரமாகப் பார்வதி தேவியுடன் கொலுவீற்றிருக்கின்ற சம்ஹார கர்த்தாவாகிய ருத்ர பகவான் கல்லால் விருக்ஷத்தினடியிலும், சத்தியலோகத்தில் காயத்ரீ சாவித்ரீ சரஸ்வதீ என்ற மூன்று தேவிமாருடன் எழுந்தருளியிறா நின்ற சிருஷ்டிகர்த்தாவாகிய ஹிரண்யகர்ப்பர் வைஜயந்தி பருவதத்திலும், சதாசிவன் மஹேஸ்வரன் கணேஸ்வரர் சுப்ரமண்யர் முதலிய மூர்த்திகளும் நவக்கிரஹ தேவதைகள் திக்பாலகர்கள் சப்த ரிஷிகள் இவர்களும் சனாதன தர்மத்தின் உண்மையிலேயே நிலைத்து நிற்பதற்காகவே ஏகாந்த ஸ்தானத்தை அடைந்திருக்கிறார்கள். மற்றும், விசிஷ்டாத்வைத மத ஆழ்வார்கள் ஆசாரியர்கள் சைவ சித்தாந்த மத சமயாசாரியர்கள் அறுபத்து மூன்று நாயன்மார்கள் சங்கர பகவத்பாதர் பாஷ்யகாரர் மத்வர் வித்தியாரண்யர் வேதாந்த தேசிகர் மணவாள மாமுனிகள் புத்தர் சைதன்யர் இவர்களது அந்தரங்க அபிப்பிராயங்களும் சனாதன தர்மத்தின் ஸ்தாபகமும் போதனையுமென்றே நீங்கள் நிச்சயமாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

**தருமமென்பது :** மார்க்கமென்று தாத்பர்யம். அது சங்கல்பமுள்ளவரை செல்லுகிறது. சங்கல்பமில்லாதவிடம் மூலப்பிரகிருதியுந்தாண்டிய பிரம்மமொன்று தானாகையால் அதுவரை தர்மமிருந்தே தீரவேண்டியிருக்கிறது. அதனாலேயே



(5060) வருஷங்களுக்கு முன்னால் குருக்ஷேத்திர புண்ய பூமியில் யுத்தகளத்தில் உத்தராயண புண்ணிய காலத்தை எதிர்ப்பார்த்து உயிரை வைத்துக் கொண்டு அஸ்திரங்களின்மீது சயனித்த வண்ணமாய்ப் பிரஹ்ம நிஷ்டையிலிருந்த பீஷ்மாச்சாரியர் அவதார புருஷனாகிய ஸ்ரீ கிருஷ்ண பகவான் முன்னிலையில் மகாத்மாவாகிய தர்மபுத்திரருக்கு உபதேசஞ் செய்யுங் காலத்தில் மோக்ஷமும் தர்மத்திற்குள்ளேயே அடங்கி விட்டதென்று சொல்லி யிருக்கிறார். ஆதலால், நாமனைவரும் தர்மத்தை அனுஷ்டிக்கப் பட்டவர்களா யிருக்கிறோம். ஆதி கால முதலிதுவரை அவதாரம் செய்தருளிய எல்லோருடைய அந்தரங்க அபிப்பிராயமும் தர்ம ஸ்தாபன உத்தேசமேயென்று தெரிந்துக் கொள்ளுங்கள். ஆசாரியரில்லாமல் எந்த தர்மத்தையும் சாஸ்திரத்தையும் அப்பியாசித்தால் பூர்ண பலனை அடைய முடியாதென்பது ஆதிகால வழக்கமாக இருந்து வருகிறது. சாதன சதுஷ்டய சம்பத் தும் மோக்ஷ இச்சையும் ஆசாரியருமின்றித் தானே உபநிஷத்து முதலிய பிரபல வேதாந்த சாஸ்திரங்களை அப்பியாசித்து வந்தால் நன்மைக்குப் பதிலாகத் தீமையே விளையுமென்பது அனுஷ்டானத்தில் நன்றாய்த் தெரிகிறது.

உதாரணமாக, முன்னொரு காலத்தில் சகல வேதாந்த சாஸ்திரங்களையும் ஆசாரியரில்லாமல் நன்றாகக்கற்ற ஒருவர் ஓர் தனியான இடத்தில் விசாலமான புஷ்பத் தோட்டம் மடம் தடம் தடாகம் மற்றும் பற்பல அழகிய விருக்ஷங்கள் செடிகள் இவை களைப் பல வருஷங்களாகக் கஷ்டப்பட்டுத் தயார் செய்து பல நூற்றுக்கணக்கான சிஷ்யர்களுக்கு ஆசாரியராக இருந்துக் கொண்டு வேதாந்த சாஸ்திரம் போதித்துக் கொண்டு வந்தார். ஓர் நாள் அவ்வழகிய ஆஸ்ரமத்துள் ஓர் காராம்பசு தெரியாமல் உள்ளே நுழைந்து சில செடிகளைத் தின்று விட்டது. ஆசாரியாருக்கு அடங்காக் கோபம் வந்து கத்தியினால் அப்பசுவை இரண்டாக வெட்டி விட்டனர். அதைப் பார்த்த அவரது சிஷ்யர் களும் ஊரிலுள்ள பெரிய மனிதர்களும் ஆசாரியரிடஞ் சென்று தாங்கள் மஹாபாதகமாகிய செய்கையைச் செய்து விட்டீர்களே.

இது பெரிய பாபமல்லவாவென்று கேட்டதற்கு அவர்களை நோக்கி நீங்கள் இத்தனை வருஷ காலமாக வேதாந்த சாஸ்திர பாடங் கேட்டும் பிரயோஜனமில்லாமற் போய்விட்டதே. ஞானேந்திரியம் ஐந்து கருமேந்திரியம் ஐந்து அந்தக்கரணம் நான்கு ஆகப் பதினான்கு தத்துவங்களாலேயே பிரபஞ்சத்திலுள்ள சகல காரியங்களும் நடைபெறுகின்றன. அவை ஒவ்வொன்றுக்கும் அதிதேவதைகளுண்டு. மனதிற்கு அதிதேவதை சந்திரன் கண்ணுக்கு அதிதேவதை சூரியன் கைக்கு அதிதேவதை தேவேந்திரன். இவ்வாறு சகல இந்திரியங்களுக்கும் அதிதேவதை களேற்பட்டிருக்கின்றன. அவைகளின் விவரங்களைப் பிரபல வேதோபநிஷதங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. அதில் கையால் கத்தியை எடுத்துப் பசுவை வெட்டியது வாஸ்தவம். கைக்கு அதிதேவதை தேவேந்திரனாகையால் அந்தப் பாபவம் அவரைச் சேர்ந்ததல்லவா? இத்தனைநாள் வேதாந்த சாஸ்திரங் கேட்டும் இந்த உண்மை தெரியாமற் போய்விட்டதேயென்று வருத்தமுற்றனர். இந்த விவரத்தை ஞான திருஷ்டியாலறிந்த இந்திர பகவான் விருத்த வேடங் கொண்டு பிரஹஸ்பதி, வசிஷ்டர், தன்வந்திரி, அகஸ்தியர், இந்நான்கு ரிஷிகளோடு இவ்வாசாரியர் வேதாந்த பாடங் கூறுகிற இடத்திற்கு வந்தனர். விருத்தராகிய இந்திரன் ஆசாரியரை நோக்கி இந்த அழகிய ஆஸ்ரமம் யாருடையது. தடாகங்கள் வெகு நன்றாக நிர்மாணிக்கப்பட்டிருக் கின்றன, ரஸ்தாக்கள் வெகு நேர்த்தியாய்ச் செப்பனிடப்பட்டிருக் கின்றன, மரங்களும் செடிகளும் வெகு கஷ்டப்பட்டு வைத்திருப்ப தாகத் தெரிகிறது, இத்தனையுஞ் செய்தவர் அதிப் புண்ணியசாலி யாயிருக்க வேண்டும். இதற்குக் கர்த்தாயாரென்று வினாவினர். அதற்கு ஆசாரியார் நான்தான் இவைகளுக்கெல்லாம் கர்த்தா, வெகு சிரமப்பட்டு இவையனைத்தும் என்னாலேயே செய்யப்பட்ட வென்றனர். ஆனால், இவ்வாறு செய்த காரியங்களின் புண்ணிய மெலாம் யாருடையது என்று இந்திரன் கேட்க என்னுடையதுதா னென்று ஆசாரியர் கூறினார். அப்படியானால் பசுவை வெட்டிய பாபம் மாத்திரம் இந்திரனுக்கோ வென்றவுடன் ஆசாரியார் வெட்கித் தலைகுனிந்தனர், மற்றுமங்குள்ள சிஷ்யர்கள் கொல்



லென்று சிரித்தனர். ஆசாரியரில்லாமற் செய்யப்படுகிற காரியங்கள் பிரயோஜனமற்றவையாகவே முடிந்து விடுமாகை யால் தகுந்த ஆசாரியரைத் தேடி அடைந்து கொள்ள வேண்டும். நமக்காவது ஒரு ஆசாரியர் வேண்டுமென்று சொல்லுகிறோம். கிருத யுகத்தின் மத்தியிலவதரித்த தத்தாத்ரேயர் என்ற மஹாத்மா விற்கு 1. பூமா தேவி 2. வருணன் 3. அக்னி 4. வாயு 5. ஆகாசம் 6. சந்திரன் 7. சமுத்திரம் 8. சூரியன் 9. மலைப்பாம்பு 10. காட்டுயானை 11. விட்டில் பூச்சி 12. மச்சம் 13. மன்மதன் 14. சிறு பெண் 15. தேனி 16. தாசி 17. ஆரண்யம் 18. மான் 19. சர்ப்பம் 20. சிலந்திப்பூச்சி 21. சிறு பையன் 22. பச்சைப் புழு 23. திகைப்பூடு 24. நெய்யப்பட்ட நூல். இந்த இருபத்து நான்கையும் ஆசாரியராக அடைந்து உத்தமமான சனாதன தர்மத்தைச் சாக்ஷாத்கரித்தன ரென்று இதிகாச மூலமாகத் தெரிகிறது. ஆதலால், நாமனைவரும் நமது முன்னோர்களான மஹரிஷிகளின் மார்க்கங்களின்படி தவறாமல் ஈடுபட்டு ஜென்ம மரணமில்லாத மோக்ஷ சாம்ராஜ்ய வாழ்க்கையை அடைய வேண்டியது அவஸ்யமான கடமையா கிறது.

–: ஓம் தத் ஸத் :–

## ஸ்ரீ விலக்ஷணானந்த பரமாத்ம சுவாமிகள் அருளிய

# நித்தியானந்த நிலையம்

அத்தியானந்தபோத வமலமேயமலமென்ப
சித்தியானந்ததேவ சிற்பரானந்தநாக
முத்தியானந்தமூல குண்டலிநாகைமூதூர்
நித்தியானந்தமான நிலையத்தை நிகழ்த்துவாரே.

எழுபத்து இரண்டாயிரம் நாடி நரம்புகள் சூழ்ந்துள்ள நூற்றெட்டுப் பெரிய நாடிகளின் நடுமத்தியில் அமைந்துள்ள அந்தர்முக நாகைநாத ஸ்வாமி சந்திதானமுன்பாக அமைக்கப் பட்டுள்ள ஸ்தூல சரீரத்தில் வசித்துக் கொண்டிருப்பவன் ஒருவன். பகிர்முக வடிவ பாரத கண்டத்துச் சோழ மண்டலத்தில் திரு நாகேஸ்வரர் ஆலயத்தின் முன்பாகவுள்ள நூற்றுக்கால் மண்டபத் தில் நின்று கொண்டு உபந்நியாசித்த முதலில் ஆரம்பித்தெழுதிய இச்செய்யுள் அபூர்வ அபார அந்தரங்க பகவத் சக்தியால் விளங்குகிற பற்பல வியாக்கியானங்களுடன் கூடிக்கிடக்கின்றது. அவற்றின் அனுபவயுக்தமான யோகபரமாகவுள்ள ஓர்வித தாத்பர்யமட்டுஞ் சொல்லிவிட்டுப் பின்பு (நித்தியானந்த நிலையம்) என்பதை பலமான சுருதியின் பிரமாணத்தைக் காட்டியும் அறிவுக்குப் பொருத்தமானதும் சுருதிக்கும் மஹான்களுக்கும் விரோதமாகாத யுக்தியைப் புகட்டத்தக்கதும் இரண்டுக்கும் உச்சியிலுள்ள அனுபவமானதுமாகிய வசன செந்தமிழ் நடையில் மெதுவாக ராகமின்றி அகண்டனது அருளால் கூற ஆரம்பிக் கின்றேன். கள்ளமின்றிய நெஞ்சின் மார்க்கமாய்க் கேட்பீர்களாக.

சர்வானந்தங்களையும் ஒருவன் ஒருங்கே பெற வேண்டு மாயின் முதலில் மூலாதார பகிர்முக பரசிவ புத்திர பூதரூப கணபதியானந்தத்தைப் பெற்று அதன் வல்லமையைக் கொண்டு அதனப்பால் உதயமாகாநின்ற உண்மை ஞானத்தின் லேசமாத்திர மாகிய போதாறாய்ச்சிக்குள் நின்றால் அவ்விடமே சுத்தா சுத்த



பேதமின்றிய மஹாபரிசுத்தமான இடமென்று மஹத்துக்கள் கூறுவார்கள்.

இவ்வளவு நிலைமைவரை வாய்ந்த பின் உண்மையறி வானந்த அனுபவச் சித்தியுண்டாகி அதனப்பால் அதனிடத்தொரு ஆனந்தமுகித்து ஆங்குதயமாகா திருக்காத தேவசான்னித்திய விசேஷத்தால் பராபர ஞான தீதமயமான அதீதானந்தத்திற்கும் மூலமென்று கூறக்கூடிய அழகும் அருமையும் வாய்ந்திராநின்ற.

சகசானந்த நிலைமையுந் தாண்டிய சங்கற்பரகித சாந்தானந்த சத்துவாதித அப்ரமேய வடிவ அநாமய மோக்ஷமும் அதனானந்தமும் அதற்கு ஆதியேதுவாகிய ஸ்தூல சரீர ஏகதேச ஈஸ்வராம்ச பிராண ரக்ஷணவடிவ மூலாதாரத்தை இடமாகக் கொண்டிரா நின்ற குண்டலி சக்தியின் சொந்த ஸ்தானமாகிய திருவாய்ந்திரா நின்ற நாகைவடிவ பிரமரந்திர முதிர்ந்த பட்டினத் தில் சதா வசித்து வரப்பட்ட யோகீஸ்வராளுக்கு அனுபவமாய் இருப்பதாகிய.

சார்வதா இடைவெளியில்லாத மாறிவரக் கூடாத நித்திய மும், ஆனந்தமாயிருக்கக் கூடிய ஓர் இடம் நம்மிடத்திலேயே தயாராக இருக்கின்றது. அதனை விரிவாக ஆதி மஹான்கள் சன்னிதான விரோதமின்றி அதிகாம்பீர்யங்கங்கண வித்யாவிசேஷ கோலாகலத்தைக் கொண்டு அதிசாதுர்யமாகக் கூறுவார்கள்.

## நித்தியானந்தம் அதன் நிலையம்

நித்தியானந்தம் என்பது பொதுவாக ஒரு காலத்தில் இருந்து ஒரு காலத்தில் மாறிவிடக் கூடியதற்ற சதோதயமான ஓர்வித மனதிற்கெட்டாத ஆனந்தமென்பர் அல்லது பிரமசுகம் என்றும் கூறலாம். முதலில் நமது வைதீக முறைப்படியும் ஏனைய உலக லௌகீக வழக்குப்படியும் ஏதாவது ஒன்று கூறுவோமானால் அதற்கெதிரிடையான தொன்று கிளம்புவது வழக்கம். இதைப் பற்றியே (தாயுமானவர்) அது வென்றா லெதுவெனவென்றெடுக் குஞ் சங்கை எனக் கூறினார். ஆனபடியால் தற்சமயம் நாம்

(நித்தியானந்தம்) என்று ஒன்றுண்டு என்போமானால் அநித்தியானந்தம் ஒன்றிருக்க வேண்டும்.

ஆக இரண்டு ஆன்நதமிருக்கிறதென்ற தெரிந்து கொண்டோம். இவ்விரண்டு ஆனந்தத்தில் நாம் எந்த ஆனந்தத்தை அடைய வேண்டும். அடைகிறோம், அடைவது நலம். அடைந்துக் கொண்டிருக்கிறோம். அடைவது அவசியம் என்ற இவ்விஷயத்தை ஆராய்வோமானால் அனித்தியானந்தத்தையே அடைகிறோம். அடையப்போகிறோமென்ற நினைப்பு அடைந்து கொண்டிருக் கிறோம். இவ்வார்த்தைகள் வெகு மயக்கமில்லாதது. அனித் தியானந்தத்தை அடைந்து அனுபவியாதவன் நித்தியானந்தத்தை அடைய மாட்டான். அனித்திய வாழ்வு நித்திய வாழ்விற்கு ஏதுவா யிருக்கிறது. அனித்தியமும் நித்தியமும் விட்டுப் பிரிக்காதவைகள். அனித்தியமாக நாம் எண்ணிக் கொள்வதை தவிர வாஸ்தவத்தில் அனித்தியமில்லை. நாம் நித்தியமான இடத்தைக் காணும்வரை எல்லாம் நமக்கு அனித்தியமாகவே தெரிகிறது. நாம் நித்தியத்தை அனுபவித்து விட்டால் எல்லாம் நித்தியமாகவே புலப்படும். இவற்றைப் பார்க்கும்போது அவரவர்கள் அனுபவம்போல் உலகம் புலப்படும் எல்லாம் புலப்படுமென்று சுருதி கூறுகிறது. மற்றும் அனித்தியானந்த மஹாரிஷிகள் நித்தியானந்த மஹாரிஷிகள் இவைகளில் மெடல் பெற்றவர்கள் இவைகளில் தேர்ந்தவர்கள் பலர்கள் உலகத்தால் தற்போது இருக்கலாமோ வென்ற சங்கை இங்கே மனதிலுத்தித்து விட்டது.

அனித்தியானந்தத்தை அனுபவியாதவனுக்கு நித்தியானந்தம் கிடைக்காது. உலக யுத்தியில்லாதவனுக்கு ஞான யுக்தி வராது. உலக காமியாகாதவன் மோக்ஷ காமியாகான் என்பது முதியோர் வழக்கு. அஞ்ஞானத்தில் உறுதியில்லாதாவனுக்கு ஞானவுறுதி வராது. ஸ்தூல உணர்ச்சி வராதவனுக்கு சூக்ஷம உணர்ச்சி வரமாட்டாது. பகிர்முக திருஷ்டியில் அன்பு இல்லாத வனுக்கு அந்தர்முக திருஷ்டியின் அறிவு கூடி வராது. ஆதலால் அனித்தியானந்தானுபவமின்றி நித்தியானந்தானுபவம் கிடைக்கா தென்று ஏற்படுகிறது. பின்னோ நாம் நாடோறும் உண்டு உடுத்துக்



கண்டுகளித்துப் பெண்டு மக்கள் செல்வம் முதலிய சாதனங்களால் உண்டாகக் கூடிய அனித்திய ஆனந்தத்தை அடைந்து சில நேரங் கழித்து அந்த ஆனந்தம் விலகிவிட்டபின் துக்கமடைகிறோம். மறுபடியும் அந்த மாறுஞ் சுபாவமான அனித்தியானந்தத்திற்கு ஏதுவாகிய பெண்டு, செல்வம் இவைகளைத் தேடுகிறோம். இவைகளால் உண்டாகும் ஆனந்தத்தைப் பேதமாக அனுபவிக் கிறோம். அதை நாம் ஆழ்ந்தி விசாரிப்பதில்லை. மூட அறிவால் அனித்யசுகங்களைப் பெற்று உடனே மாறிப் பழையபடியும் அந்த சுகத்தையே நாடிச் செல்கிறோம். இதைப் பார்க்கும்போது மனுஷ்யத் தன்மையுடையவர்கள் இவ்வானந்தத்திற் செல்வ தருமை அனித்தியானந்த ஆசையை விட்டால்தான் நித்தியானந்த ஆசை தீவிரமாக வுண்டாகுமென்போமேயானால், நித்தியானந்தம் உதயமானால் தான் அனித்தியானந்தம் உற்பத்தியில்லாமற் போகுமென்பது ஓர் வழக்கு. இவ்வகையால் என்ன தெரிகிற தென்றால் அனித்தியானந் தத்தையும் அகற்றி வர வேண்டும். நித்தியானந்தத்தையும் அடைய முயற்சி செய்து வரவேண்டும். அதற்கேற்றபடி திடமாக முன்னோர்கள் அனுபவப்படி யதார்த்த மாகச் சுருதி, குரு, சுவானுபவம், இம்மூன்றை ஆதாரமாய்க் கொண்டு முயற்சித்தால் (நித்தியானந்த நிலையத்தை) அடையலா மென்று அகத்திலே அகமற்ற அந்தணர்கள் கூறுகிறார்கள். அத்தகைய ஆனந்தத்தை யும் அதன் நிலையத்தையும் அடைகிற முறையையுங் கூற ஆரம்பிக்கிறேன். அன்போடு ஏகாக்கிர சித்தத்துடன் கேட்பீர்களாக.

நமது ஸ்தூல சரீரத்திலுள்ள ஆயிரக்கணக்கான பெரிய நாடிகளுள் அதிக நீளமும் பலமும் பருமையுமுள்ள திடமான நாடியின் அம்ச ஆறாதார அதிதெய்வ, அமலாற்புத, அச்சுத அவ்வாறிடங்களையும் அறிவின் வலியினால் தாண்டி அதனப்பால் யோகாந்த சில மார்த்தாண்ட மந்திரார்த்த சோடகலா அறிவால் பதினாறு சாகையின்பிராணாசாம்ஸ வேகத்தைக் கண்டு தடுத்து நிறுத்திப் பிராணனையும் மனதையும் ஒன்றுபடுத்தி ஜீவனிற் கலந்துவிடச் செய்து சிதானந்த யோகியானபின் சகசானந்தவுட்

குருவின் பிரசாத வல்லமையினால் ஆங்கு நின்று மேலேறி அகண்டானந்தவாலை வல்லமையால் அகந்தை அறிவிற் கிடத்திச் சுழுமுனாடி வழியாகப் பிடரிவழி சென்று ஏகாந்த ரத்னமண்டபஞ் சென்று ஏழடுக்கு மாடிவீடுபோய் நர்த்தனானந்த நடராஜ தெரிசனங் கண்டு நாடோறும் அவ்விடத்திருந்து அனுபவஞானியாகி அதுவு நழுவிவிட்டதாயின் அப்பால் ஓர் (நிலையம்) இருக்கின்றது. அது அசைவில்லாத நிலையம். சதாகால ஆனந்தமாயிருப்பதால் (நித்தியானந்தம்) இதற்குத்தான் நித்தியானந்த நிலையம் என்று பெயர். இப்போது கூறிய (நித்தியானந்த நிலையம்) யோக பரமாகக் கூறியது. இனி இன்ப முதிர்ந்த ஞானபரமாக முற்கூறிய பதத்திற்கு ஓர் உரை எழுதுகிறேன்.

மனதை மந்திர ஜெபம் பிராணாயாமம் சகுணத்யானம் இவைகளிற் செலுத்திச் சுத்தமாக்கிக் கொண்டபின் ஆசார்யர் முன்னிலையில் மஹாவாக்கிய ஞானோபதேசஞ் செய்து கொண்டு முதலில் வெளியில் தோற்றக் கூடிய சரீரம், வுலகம், புத்தி, மனது, பிராணன், அஞ்ஞானம், ஞானம் இவைகளை முறையே கடந்து அப்பாற் சென்று அமானுஷ்ப்பிரயத்தன பூர்வக அந்தரங்க அதி சூக்ஷ்ம பிரமானுபவத் தேகமாக நிலைத்துவிட்ட இடமே (நித்தியானந்த நிலையம்)

இன்னும் அனேகவித தாத்பர்ய மார்க்கங்கள் கூறுவது விரியுமன்றோ மற்றெக்காரணங் கொண்டோ சுருக்கிக் கூறப் பட்டது. (நித்தியானந்த நிலயைம்) என்னும் பெரிய அபார நிலையை அடைய விரும்புபவர்கள் சுக துக்கம் இரண்டையும் அடியோடு விட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

சுகம் வேண்டும் துக்கம் வேண்டாமென்று நினைத்தால் நிற்கிறதில்லை. சுகம், துக்கம் இரண்டும் ஒரே தாய் வயிற்றுப் பிள்ளைகள். சுக மட்டும் அல்லது துக்க மட்டும் ஒருவனுக்கு வரமாட்டாது. வந்தால் இரண்டுங்கலந்தே வந்து கொண்டிருக்கும். சுகதுக்கமிரண்டையும ஒருங்கே விட்டால்தான் சுகமடையலாம். சுகதுக்கம் என்ற படிகளைத் தாண்டியவன்தான் (நித்தியானந்த



நிலையத்துக்கு) அதிகாரியாகிறான். சுகம் வந்தால் துக்கம் வரும் மேல் வந்தால் கீழ் வரும். நன்மை வந்தால் தீமை வரும். ஆதலால் இரண்டு தன்மையை விட்டவன் ஞானயோகத்திற்கு அதிகாரி யாகிறான்.

பின்னும் மேற்கூறிய நித்தியானந்த நிலையத்தை அடை வதற்கு இன்ன சாதி, குலம், தேசம், ஊர், மதம், இடம் என்பதான நிபந்தனையின்றி ஞானமடையலாம். இப்படியே நமது ஹிந்து மதத்திற்கு பொதுவான ஆதார நூல் கூறுகிறது. தற்போது எங்கு பார்த்தாலும் அனித்தியானந்த மஹரிஷிகளாவே பிரபலமாக இருக்கிறபடியால் நித்தியானந்த மஹரிஷிகள் பயந்து ஒளிந்திருப் பார்களோ என்ற சந்தேகமில்லை. எல்லாரையும் எவ்விடத்திலும் எங்கும் எப்போதும் எவ்விதத்திலும் சமபாவனையாகப் பார்ப்பதே நமது பாரத நாட்டுப் பெரிய வழக்கம். அதுதான் நித்தியானந்த நிலையைக் காண்பிக்குங் கருவி. ஆதி மனுகால முதல் இதுவரை யாதொரு விஷயத்திலும் பேதபாவனை பூர்ண அபேதமாக இருந்த நமது நாடு தற்கால ஆத்ம ஞானமற்ற நூதன அறிவாளிகளின் சேர்க்கையாலோ காலத்தாலோ, கருத்தாலோ வினையாலோ மற்றெக்காரணத்தாலோ பேதபாவனையுடன் அவன் பெரியவன், இவன் சிறியவன் அவன் மேல் ஜாதி இவன் கீழ் ஜாதி என்ற பேத அறிவை விட்டு அந்தரங்கத்தில் அபேதமுற்று ராகத்துவேஷமின்றி மஹாமேதாவியின் நிலைமையடைவோமானால் (நித்தியானந்த நிலையம்) ன்பதை அடையலாம். இவ்வாறு இவை நிற்பது.

–: ஓம் தத் ஸத் :–

## ஸ்ரீ விலக்ஷணானந்தத் திருப்பதிகம்

எண்சீர் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

சன்மார்க்க மினையதெனத் தெளிந் திடாமற்
சகமார்க்கந் தனிலுழலுஞ் சண்டா ளர்க்குப்
பன்மார்க்கங் களுமகண்ட பரத்தைச் சாரும்
படியறிஞர் வகுத்ததெனப் பகுத்துக் கூறித்
துன்மார்க்க மறவொழித்துச் சுகந்த ரற்காத்
துஜங்கட்டிக் கொண்டொளிருந் துரிய மூர்த்தி
நின்மார்க்கந் தனைத்தொடர்ந்திங் குய்வேன் கொல்லோ
நிகமவித்தாம் விலக்ஷணா நந்த வாழ்வே. 1

அத்தகரப் பாணியெனப் பதங்கள் மூன்றே
யானாலும் பொருளேக மாமென் றாராப்
பித்தர்களைப் போதசமய வாதஞ் செய்வோர்
பிரமனரி யரன்வேறென் றிறுமாப் புற்றுத்
தத்தளிக்குங் காலமறிந் துல்க ஜீர்ணோத்
தாரணஞ்செய் திடற்கொரவ தார மாகி
வித்தகமாய்த் திருநடஞ்செய் வேத மூர்த்தி
விலக்ஷணா நந்த குரு விமல வாழ்வே. 2

அந்நாளிற் பாற்கடலைக் கடைந்து மாயன்
அமர்களுக் கமுதளித்த வாற்றலே போல்
இந்நாளி னூற்கடலைக் கடைந்து மாந்தர்க்
கெழிற்போத வமுதளிக்கு மின்ப மூர்த்தி
எந்நாளிவ் வேழைமதி யுடைய நாயேன்
ஈனமனத் துரிசனைத்து மிகந்து வாழ்வேன்
மின்னார்தம் மாயையெனுங் கடல் கடந்த
விலக்ஷணா னந்தகுரு விமல வாழ்வே 3

அற்பவொளி யுடையவிண்மீ னகங்காரத்தை
யதிகவொளி யுடையரவி யடக்கு மாபோல்
பற்பலபுன் மதக்குறும்ப ரகங்கா ரத்தைப்
பாழ்படச்செய் தொளிரகண்ட பானுவேநின்
சொற்படிநின் றகமமதை விடுத்து மேலாஞ்
சுயஞ்சுடரைத் தமதுளத்திற் றுலங்கக் காணும்
விற்பன்னரே யினிப்பிறவா வீடு பெற்றோர்
விலக்ஷணா னந்தகுரு விமல வாழ்வே 4



அகமயக்குஞ் சகமயக்கு மொருங்கே நீத்திங்
ககண்டபர வெளியில்விளை யாடு முன்றன்
மகிமையினை யகிலமிசை யுரைத்தற் கான
மதியுடையோ ரரிதரிது மாதவத்தாற்
புகலரிய சுகமயமாய்ப் பொலியுங் தேவே
புநிதமுறு முனிவரனே போதமூர்த்தி
மிகையறுநின் புகழையுணர்ந் துய்வேன் கொல்லோ
விலக்ஷணா நந்தகுரு விமல வாழ்வே 5

அண்டமொரா யிரத்தெட்டு மாண்ட சூரன்
அடவிரணி யாக்கனுடன் கனகா சூரன்
மண்டுபெரும் வலிபடைத்த ராவணாதி
மற்றையபல் வீரர்களு மாண்டா ரன்னோர்
கொண்டவகங் காரநிலை குலைந்த தென்றால்
குவலயத்தி லென்போல்வார் செருக்கென் னாகும்
விண்டுவைப்போன் மகிலத்தி லவதரித்த
விலக்ஷணா நந்தகுரு விமல வாழ்வே 6

குற்றமறக் கல்லாத புலமையோர்கள்
குணக்கடலா நினதருளைக் குறிப்ப தென்றோ
சற்றுமறி வில்லாத நாயே னென்றன்
சஞ்சலமற் றுண்மைநெறி சார்வ தென்றோ
முற்றுமுணர் முனிவரனே மோனமூர்த்தி
முத்திநகர்க் கரசேமுத் தையனேனை
வெற்றுரையிற் போதொழியா விதமாட் கொள்வாய்
விலக்ஷணா நந்தகுரு விமல வாழ்வே 7

தனக்குறும்பால் வேதாந்தந் தனைத்தூ ஷித்தும்
தவம்புரியும் பெரியோரை யவமானித்தும்
மனக்குறும்பால் சீவர்களை வதைசெய் வித்தும்
மாமிசமு மதுவுமுண்டு மயக்கங்கொண்டுந்
தினைத்துணையும் வேதவிதிக் கடங்க மாட்டாத்
தீயவிராக் கதர்போலத் திரியு மாந்தர்
வினைக்குறும்பை யடக்கவென்றே யவதரித்த
விலக்ஷணா நந்தகுரு விமல வாழ்வே 8

எக்காலு மெவ்விடத்து மெம்ம னோர்கள்
இன்பமுற வருண்மழைபெய் திலகு முன்னை
முக்காலு முணர்ந்துலவு முனிவ னென்கோ
முதண்ட முண்டுமிழ்ந்த முகுந்த தென்கோ
மைக்காலன் றனையுதைத்த மகேச னென்கோ
மகிதலத்தைப் படைத்தசதுர் வதன னென்கோ
மிக்கவறியோர் புகழுஞ் சாந்த மூர்த்தி
விலக்ஷணா நந்தகுரு விமல வாழ்வே 9

மாயையெனு முகிலையற வொழிக்குஞ் சண்ட
மாருதம் போன்றொளி ருமுன்றன் மலர்த்தாள்
பேயனைய மனச்செயலற் றகண்டா நந்த
பேரொளியாய்த் துலங்குமருட் பிழம்பே போற்றி போற்றி
தாயையநிக ரன்புடனிதோப தேசந்
தரணிமுழு தினும்புரியும் தவத்தோய்ப் போற்றி
வீயுமுடற் பாசமுற்று விளக்குஞ் சோதி
விலக்ஷணா நந்தகுரு விமல வாழ்வே 10

## வாழி விருத்தம்

வேதவித் தாய் விளக்கும் விலக்ஷணானந்த மூர்த்தி
பாததா மரைகள் வாழி படிபுகழன்னோன் பாதப்
போதினை யடைந்தோர் வாழி புகலரு மறைகள் வாழி
மாதவம் புரிவோர் வாழி மகிதலம் வாழி வாழி
சச்சிதானந்த சமரஸ சற்குரு சரணார விந்தமே

சரணம் சரணம் சரணம்

இயற்றியவர்
**முத்தையா செட்டியார்**
பண்ருட்டி